1972 ஆகஸ்ட் 18]

விஞ்ஞான பரிசோதனைக் கருவிகள்.

திரு. எஸ். சி. செங்கோட்டுவேலப்ப கவுண்டர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்லூரிகளுக்கு விஞ்ஞான பரிசோதனைக் கருவிகள் வாங்க அரசு நிதி உதவி வழங்கி வருகிறதா?

(இ) ஆம் எனில், எவ்வித அடிப்படையில் எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது?

(உ) 1971-72 ஆம் ஆண்டில் நிதி உதவி பெற்ற (1) அரசு (2) தனியார் கல்லூரிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) ஒவ்வொரு ஆண்டும் தனியார் கல்லூரிகள் விஞ்ஞானக் கருவிகள் வாங்க மானியம் வழங்கலாமா என்பது குறித்து முடிவு எடுக்கப் படுகிறது. ஒத்துக்கொள்ளப்பட்ட விலையில் அல்லது கல்லூரி நிர்வாகத்தினால் செலவழிக்கப்பட்ட தொகையில் 50 விழுக் காடுக்கும், பத்தாயிரம் ரூபாய்க்கும் மேற்படாத வகையில் மானியம் அளிக்கப்பட்டு வருகிறது.

(உ) 1971-72-ம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் தனியார் கல்லூரிகளுக்கு நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை.

Commissioner of Rajapalayam Municipality.

* 37 *Q*—THIRU S. S. THENNARASU: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any complaint has been received by the Government stating that the Commissioner of Rajapalayam Municipality stopped the supply of electricity and water on the night of 12th February 1972;

(*b*) whether any enquiry was held in this regard; and

(*c*) if so, the details thereof?

இராசபாளையம் நகராட்சி ஆணையாளர்.

திரு. எஸ். எஸ். தென்னரசு: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராசபாளையம் நகராட்சி ஆணையாளர் 12-2-1972 அன்று இரவு நகர் விளக்குகளையும், தண்ணீர் வசதிகளையும் நிறுத்தியதாக அரசுக்கு புகார் ஏதும் வந்துள்ளதா?

(இ) இதுபற்றி ஏதாவது விசாரணை நடந்ததா?

(உ) ஆம் எனில் அதன் விபரம் என்ன

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) எந்தவித புகாரும் இது சம்பந்தமாக அரசுக்கு வரவில்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

Orthopaedically Handicapped Students

* 38 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of applications for the award of special scholarships in Colleges for orthopaedically handicapped students received during 1971-72; and

(b) the number and amount of such scholarships sanctioned?

உடல் ஊனமுற்ற மாணவர்கள்.

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிறப்புப் படிப்புதவித் தொகை வழங்குமாறு வேண்டி கல்லூரிகளில் பயிலும் உடல் ஊனமுற்ற மாணவர்களிடமிருந்து 1971-72-ல் வந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை யாது?

(இ) அவ்வாறு படிப்புதவித் தொகை வழங்கப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை யாது? வழங்கப்பட்ட படிப்புதவித் தொகைகள் எவ்வளவு?